## பெரியகுளத்தில் 4 உயர்கோபுர மின்விளக்குகளை

# மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார் நகர்மன்ற தலைவர்



**தேனி செப் 22**

தேனி மாவட்டம், பெரியகுளத்தில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று பட்டாளம்மன் கோவில் தெரு, தேரடி தெரு, பெண்கள் மேல்நிலைபள்ளி, சௌராஷ்டிரா சத்திரம் ஆகிய பகுதிகளில் உயர்கோபுர மின்விளக்கு அமைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து நேற்று 4 உயர்கோபுர மின்விளக்குகளை மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் விழா நடைபெற்றது. இவ்விழாவில் அப்துல்மஜீத், ராஜேஸ்வரிகுபேந்திரன், வெங்கடேசன், சுதாநாகலிங்கம் ஆகிய நகர்மன்ற உறுப்பினர்கள் அந்தந்த பகுதிகளில் முன்னிலை வகித்தனர். நகர்மன்ற தலைவர் சுமிதாசிவக்குமார் தலைமை தாங்கி உயர் கோபுர மின்விளக்குகளை இயக்கி மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார். இவ்விழாவில் நகர செயலாளர் முகமது இலியாஸ், நகர அவைத்தலைவர் வெங்கடாசலம், நகர பொருளாளர் சுந்தரபாண்டி, மாவட்ட பிரதிநிதி செந்தில்குமார் மற்றும் நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



**திருமங்கலம் அருகேயுள்ள மாம்பட்டி நான்கு வழிச்சாலை கருப்புகோவில் பகுதி முட்புதரில் அடையாளம் தெரியாத நபர் விஷம் குடித்து இறந்து கிடந்தார்.இந்த சம்பவம் குறித்து திருமங்கலம் டவுன் எஸ்.ஐ., ஜெயக்குமார் தலைமையிலான போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.**

# அய்யம்பாளையத்தில் 156 மகளிர்களுக்கு ஏ.டி.எம் கார்டுகள் வழங்கப்பட்டது

வத்தலக்குண்டு செப். 22

தமிழக முதல்வரின் முத்தான சிறப்பு திட்டமான கருணாநிதி மகளிர் ஊக்கத் தொகை தற்போது ஆன்லைன் மூலம் வங்கிகள் மூலமாக அவரவர் கணக்கிற்கு பணம் அனுப்பப்பட்டு வருகிறது. இதில் பயனாளிகள் இடைத்தரகர்கள் இன்று பணம் பெறுவதற்காக முதல்வரின் உத்தரவின் பேரில் தமிழகத்தில் உள்ள அனைத்து மகளிர்க்கும் ஏடிஎம் கார்டு வழங்கும் நிகழ்வுகள் நடைபெற்று வருகிறது.



ஆத்தூர் ஒன்றியம் அய்யம்பாளையம் பேரூராட்சிக்கு உட்பட்டு உள்ள 156 பெண்களுக்கு ஏடிஎம் கார்டு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது ஆத்தூர் தாசில்தார் வடிவேல் முருகன் அய்யம்பாளையம் வருவாய் ஆய்வாளர் சர்மிளா. அய்யம்பாளையம் கிராம நிர்வாக அலுவலர் முருகன் மற்றும் வருவாய்த் துறையினருடன் 156 பயனாளிகளுக்கு ஏடிஎம் கார்டுகள் வழங்கப்பட்டது. பொதுமக்கள் மகிழ்ச்சியுடன் வாங்கி சென்றார்கள்.

இதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துள்ள தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சர் ஐ பெரியசாமி. பழனி சட்டமன்ற உறுப்பினர் ஐ பி செந்தில். திண்டுக்கல் மாவட்ட கலெக்டர் பூங்கொடி மற்றும் இதற்கு உறுதுணையாக இருந்த அனைத்து அரசு அதிகாரிகளுக்கும் பொதுமக்கள் நன்றியும் பாராட்டும் தெரிவித்த வண்ணம் உள்ளார்கள்.

## ட்ரூகாலர் மோசடி தடுப்புக்கான ஏ.ஐ. ஐடெண்டிட்டி அம்சங்களையும் மேம்படுத்தியுள்ளது

**கோவை, செப் 22-**

ட்ரூகாலர், இன்று தனது கார்போரேட் ரீபிராண்டிங் நடவடிக்கையை அறிவித்து, கூகுள் பிளே ஸ்டோர் மற்றும் ஆப்பிள் ஆப் ஸ்டோரில் உடனடியாக அடையாளம் காணக்கூடிய வகையில் ஒரு புத்தம் புதிய ஆப் ஐகானை அறிமுகப்படுத்தியது. புதிய பிராண்ட் ஐடண்டிட்டி அறிமுகப்படுத்தப்படும் இந்த கால கட்டம், டிஜிட்டல் இயங்கு தளத்தில் தற்போது நடைபெற்றுவரும் குறிப்பிடத்தக்க அளவிலான மாற்றங்களுக்கு பொருத்தமாக ஒருங்கிணைந்துள்ளது. புத்தாக்கம் பெற்ற ட்ரூகாலரின் உணர்வு பூர்வமான நோக்கம், ஆற்றல் மற்றும் உற்சாகத்தின் மையமாக இந்த ரீபிராண்டிங் நடவடிக்கை விளங்குகிறது.

இது குறித்து ட்ரூகாலரின் இணை நிறுவனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி ஆலன் மாமேடி கூறுகையில், எங்கள் புதிய பிராண்ட் ஐடண்டிட்டி மற்றும் லோகோவை வெளியிடுவதில் நாங்கள் மிகவும் உற்சாகமடைந்திருக்கிறோம். இது எங்கள் பயனர்கள் தொடர்பாக எங்களுக்கிருக்கும் இடையறாத அர்ப்பணிப்பை வெளிப் ப டுத் து வ தோடு தொடர்ந்து ஒவ்வொரு நாளும் புதியவைகளை உருவாக்கி மேம்படுத்துவதில் எங்கள் கவனம் செலுத்தப்படுவதையும் குறிப்பிட்ட வகையில் வெளிப்படுத்துகிறது. அனைவருக்குமான தகவல்தொடர்புகள் பாதுகாக்கப் படவேண்டும் என்ற எங்கள் நோக்கமானது, சூழமைவு தேடல் ( சர்ச் காண்டெக்ஸ்ட்) போன்ற மோசடிக்கெதிரான தீர்வுகளை உருவாக்கவும் மற்றும் பயனர் தனியுரிமை மேம்பாட்டுக்கான தொழில்நுட்பத்தை நிறுவவும் எங்களுக்கு வழிகாட்டியாக இருந்து உதவுகிறது என்று கூறினார்.

இந்த ஐட்டண்டிட்டி புத்தாக்கத்தின் ஒரு பகுதியாக, ட்ரூ காலரின் பயனர்கள் ட்ரூ காலர் AI ஐடண்டிட்டி எஞ்சினின் ஒரு பகுதியாக அமைந்துள்ள சூழமைவு தேடல் (சர்ச் காண்டெக்ஸ்ட்) என்ற சக்தி வாய்ந்த புதியதொரு மோசடி எதிர்ப்பு சிறப்பம்சதையும் பெறுகின்றனர்.

மரம்
மனிதனின்
உரம்

## ஓரைமோ ‘ப்ரீபாட்ஸ் லைட்’ இயர்பட்ஸ் அறிமுகம்

**சென்னை, செப். 22**

ஆடியோ சாதனங்கள் கண்டுபிடிப்பில் முன்னணி நிறுவனமாக திகழும் ஓரைமோ பிராண்ட் அதன் சமீபத்திய தலைசிறந்த படைப்பான ‘ப்ரீபாட்ஸ் லைட்’ என்னும் இயர்பட்சை இந்தியாவில் அறிமுகம் செய்துள்ளது. இதன் விளம்பர தூதராக பாலிவுட் நடிகை மிருணால் தாக்கூரை இந்நிறுவனம் நியமித்துள்ளது. வசீகரிக்கும் இரட்டை வண்ணங்களால் நேர்த்தியான வெளிப்படையான வடிவமைப்பைக் கொண்டுள்ளது. 799 ரூபாய் விலையில் இந்த இயர்பட்ஸ் பிளிப்கார்ட் இணையதளத்தில் கிடைக்கிறது. ஒருமுறை சார்ஜ் செய்தால் இதை 40 மணிநேரம் பயன்படுத்த முடியும். இவை வேகமாக சார்ஜ் செய்யும் திறன் கொண்டவையாகும். இதை 10 நிமிடம் சார்ஜ் செய்தால் 2 மணி நேரம் பயன்படுத்த முடியும். இது எங்கள் பயணத்தில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது என்று ஓரைமோ செய்திக்குறிப்பு தெரிவித்துள்ளது.

Printed Published and Owned
by **S.Manimaran,**
Printed at Manimaran
Printers at **9**, Dindigul
Main Road, vilangudi,
Madurai - 625 018.
Phone: 0452- 2668165,
0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
**RNI Regn. No.61494 / 94**



**முதல்வர் மு.க.ஸ்டாலின் நெடுஞ்சாலைத்துறை சார்பில் மணப்பாக்கம் - கொளப்பாக்கம்-கிருகம்பாக்கம் சாலையில் ரூபாய் 4 கோடியே 5 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**



**சென்னை சுற்றுலா வளாக கூட்டரங்கில் சுற்றுலாத்துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலர்களுக்கான ஆய்வுக்கூட்டம் அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நேற்று நடைபெற்றது.**



**விருதுநகர் அரசு மருத்துவ கல்லூரி மகப்பேறு மருத்துவமனை பிரிவில் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் ஆனந்தகுமார், கலெக்டர் ஜெயசீலன் ஆகியோர் நேற்று நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டனர்.**

# பரமக்குடி வேந்தோணி கண்மாயில் செத்து கரை ஒதுங்கி கிடந்த மீன்கள்



**பரமக்குடி செப் 22**

பரமக்குடி அருகே உள்ள வேந்தோணி கண்மாயில் மீன்கள் செத்து கரை ஒதுங்கி கிடந்தன.

பரமக்குடி ஒன்றியம் வேந்தோணி ஊராட்சிக்கு உட்பட்ட பெரிய கண்மாயில் கடந்த நான்கு ஆண்டுகளாக தேங்கியுள்ள தண்ணீரில் ஏராளமான மீன்கள் உள்ளன.கடந்த சில தினங்களாக அந்த தண்ணீரின் நிறம் மாறி துர்நாற்றம் வீசுகிறது. இதனால் அந்த கண்மாயில் உள்ள மீன்கள் செத்து மிதக்கின்றன. ஏராளமான மீன்கள் செத்து கரை ஒதுங்கி கிடக்கின்றன. இதனால் அப்பகுதி முழுவதும் துர்நாற்றம் வீசுகிறது.இந்நிலையில் வேந்தோணி ஊராட்சி மன்றத்தின் மூலம் அந்த கண்மாயில் உள்ள மீன்களை பிடிக்க தாசில்தார் ரவி ஏலம் நிர்ணயம் செய்துள்ளார்.அதைத் தொடர்ந்து அந்த கண்மாயில் உள்ள தண்ணீரை வெளியேற்றி அதில் வளர்ந்துள்ள காட்டு கருவேல மரங்களை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அதே ஊரைச் சேர்ந்த மற்றொரு தரப்பினர் கண்மாயில் உள்ள நீரை வெளியேற்றினால் விவசாயம் பாதிக்கப்படும். ஆகவே கண்மாய் தண்ணீரை வெளியேற்றக் கூடாது என்றும் மாவட்ட கலெக்டரிடம் மனு கொடுத்துள்ளனர். இதனால் அந்த கண்மாயில் மீன் பிடிக்க ஏலம் விடப்பட்ட மீன்களை பிடிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே அதிகாரிகள் உரிய நடவடிக்கை மேற்கொண்டு இதற்கு தீர்வு காண வேண்டும் என வேந்தோணி ஊராட்சிக்குட்பட்ட கிராம மக்களும்,சமூக ஆர்வலர்களும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# தனுஷ்கோடியில் தலை இல்லாமல் ஆண் சடலம் மீட்பு: போலீசார் விசாரணை

**ராமேஸ்வரம், செப்.22**

தனுஷ்கோடி கடலோர பகுதியில் நேற்று மாலையில் தலை மற்றும் ஒரு கை இல்லாமல் மணலில் புதைந்த நிலையில் இருந்த அடையாளம் தெரியாத ஆண் சடலம் ஒன்றை போலீசார் மீட்டு விசாரணை நடத்தி வருகின்றனர்.

ராமேஸ்வரம் தனுஷ்கோடி கடலோரப் பகுதியில் இறந்த நிலையில் ஆண் சடலம் உண்டு கரை ஒதுங்கி இருப்பதாக தனுஷ்கோடி போலீசாருக்கு அப்பகுதி மீனவர்கள் தகவல் தெரிவித்துள்ளனர் அதன் பேரில் அங்கு சென்ற போலீசார் மணலில் புதைந்த நிலையில் தலையும்,வலது கையும் இல்லாமல் உடல் சிதைந்த நிலையில் ஒரு ஆண் சடலத்தை இருப்பதை கண்டறிந்தனர். அதன் பின்னர் உடலை போலீஸார்கள் கைப்பற்றினார். பின்னர் ராமேஸ்வரம் அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். அதன் பின்னர் வழக்கு பதிந்து இது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.மேலும் தமிழக கடலோரப் பகுதியில் உள்ள மீனவர்கள் மீன் பிடிக்கச் சென்று கடலில் மாயமாகி இங்கு கரை ஒதுங்கப் பட்டதா, இல்லை ஏதும் கொலை செய்து யாரும் மணலில் புதைக்கப்பட்டதா என தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். அடையாளம் தெரியாத கண்டெடுக்கப்பட்ட ஆண் சடலம் குறித்து மாவட்ட காவல்துறை அதிகாரிகள் தமிழகப் பகுதியில் உள்ள அனைத்து காவல் நிலையங்களுக்கு தகவல் அனுப்பியுள்ளனர். மேலும் இலங்கை கடலோரப் பகுதியில் கடலில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் ஏதும் மாயமாகி இருக்கலாம் என காவல்துறையினர் இலங்கையில் உள்ள இந்திய தூதரக அலுவலகத்திற்கும் தகவல் அனுப்பியுள்ளனர் மேலும் போலீசார் இது குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்

# இளையான்குடி வட்டத்தில் பயனாளிகளுக்கு ரூ.75.31 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள்

## சிவகங்கை கலெக்டர் வழங்கினார்

**சிவகங்கை, செப். 22-**

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வட்டத்தில் உள்ள உதயனூர் கிராமத்தில் மக்கள் தொடர்பு முகாமை மாவட்ட கலெக்டர் ஆஷா அஜித் பயனாளிகளுக்கு அரசின் நலத்திட்ட உதவி களை வழங்கினார். பின்னர் அவர் பேசியதாவது:-

பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு முதல்வர் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை வழங்கி வருகிறார். மேலும் பொது மக்களின் கோரிக்கையின் அடிப்படையில் அரசின் நலத்திட்ட உதவிகளை பொதுமக்களுக்கு நேரடி யாக வழங்கிடும் பொருட்டு ஒவ்வொரு மாதமும் ஒரு வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தினை தேர்ந் தேடுத்து அதில் உள்ள கிரா மங்களுக்கு சென்று பொது மக்களின் கோரிக்கையின் அடிப்படையில் ஒவ்வொரு மாதமும் மக்கள் தொடர்பு முகாம் மாவட்டத்தின் பல் வேறு பகுதிகளில் நடத்தப் பட்டு வருகிறது.

இந்த முகாமினை முன்னிட்டு பொதுமக்களின் தேவைகள் மற்றும் நலத் திட்டங்கள் தொடர்பாக 233 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு அதில் தகுதியுடைய 130 மனுக்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் பொது மக்களின் குடிநீர் தேவையை நிவர்த்தி செய்திடும் பொருட்டு கூட்டு குடிநீர் திட்டம் ஜல் ஜீவன் திட்டம் போன்ற திட் டங்களின் கீழ் ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர் வழங்கு வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கிராமப்புற மக்களின் வாழ்வாதார மேம் பாட் டிற்கு மகளிர் திட்டம் கூட்டு றவு சங்கங்களின் மூலம் கிஷான் அட்டை, கால்நடை பராமரிப்பு, கடன் பயிர் கடன் மற்றும் கருவேலை மரங்களை அகற்றி மிளகாய் சாகுபடி செய்து பயன் பெறுவதற்கென ஒரு ஹெட் டருக்கு ரூ. 7,500 தொகை என அரசின் பல்வேறு திட் டங்களின் கீழ் பொதுமக்க ளுக்கு பயனுள்ள வகையில் பல்வேறு திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

இதனைக் கருத்தில் கொண்டு அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களை அணு பயன் பெற வேண்டும். மேலும் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின் கீழ் விண்ணப்பித்த தகுதியான நபர்களை தவிர நிரா கரிக்கப்பட்ட மனுக்களுக்கு அதற்கான காரணங்களை இணையதளத்தின் வாயி லாக தெரிந்து கொள்ளலாம். அதில் ஏதேனும் சந்தேகங்கள் இருப்பின் அதனை மேல் முறையீடு செய்து நிவர்த்தி செய்து கொள்ளலாம். பெற்றோர்கள் தங்களது குழந்தைகளுக்கு அழியா செல்வமான கல்வியினை வழங்கிட வேண்டும். குறிப்பாக அவர்கள் உயர் கல்வி கற்பதற்கும் உறுதுணையாக இருந்திட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் மோகனச்சந்திரன், மாவட்ட ஊரக முகமையின் திட்ட இயக்குநர் சிவராமன், சிவகங்கை வரு வாய் கோட்டாட்சியர்சுகிதா, இளையான்குடி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் முனியாண்டி, உதயனூர் ஊராட்சி மன்ற தலைவர் பிரிட்டோ, இளையான்குடி வட்டாட்சியர் கோபிநாத் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

தினபூமியில்
விளம்பரம்
செய்து பயன்
பெறுங்கள்

### காணவில்லை

**எனக்கு சொந்தமான அசல் RC புத்தகம் (வ.எண் TN63H6935 சிவகங்கை மாவட்டம்) கடந்த 16.11.2022 அன்று மானாமதுரை புதிய பேருந்து நிலையம் அருகே ஜெராக்ஸ் எடுத்து விட்டு வரும் போது தொலைந்து போய்விட்டது. எனவே அசல் RC புத்தகத்தை கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு தகவல் தெரிவிக்கவும்.**

**ரெங்கராஜன், த/பெ.சாதசிவம்
5/15 ஆர்.சி சந்து
மானாமதுரை,
சிவகங்கை மாவட்டம்.
செல்:9944338293**

### காணவில்லை

**இராமேஸ்வரம் 15/ 27, சல்லிமலை தெரு என்ற முகவரியில் முருகன் மகனாகிய கார்த்திக் ரோசன் ஆகிய நான் வசித்து வருகிறேன். நான் கடந்த 14-8-2023 ஆம் தேதி இராமேஸ்வரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பதிவு எண் 3143/2022 அடங்கிய அசல் பத்திரத்தை காணாமல் போய்விட்டது. இது குறித்து 16-8-2023-ம் தேதி ராமேஸ்வரம் நகர் காவல் நிலையத்தில் ஆன்லைன் மூலம் புகார் அளித்துள்ளேன்.எனவே எனது அசல் பத்திரத்தினை யாரேனும் கண்டு எடுத்திருந்தால் எனது முகவரிக்கு தந்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்**

**இப்படிக்கு
மனுதாரர்
கார்த்திக் ரோஷன்**

### பொது அறிவிப்பு

**இதனால் சகலமானவர்களுக்கு தெரிவிப்பது என்னவென்றால் திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தாலுகா, உசிலம்பட்டி கிராமம், முத்துபழனியூரில் வசித்து வரும் ராஜலிங்கம் மகன் கருப்பணன் அவர்கள் கொடுத்த தகவலின் பேரில், எமது கட்சிக்காரருக்கு கடந்த 04.06.1983-ம்தேதிய வேடசந்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 463/1983-ம் எண்ணாக பதிவு செய்யப்பட்ட அசல் கிரையப் பத்திரத்தை எமது கட்சிக்காரர் கடந்த 15.09.2023-ம் தேதியில் அவரது வீட்டிலிருந்து ஒரு போக்குவண்டியில் எரியோடு கனரா வங்கிக்கு சென்று விட்டு அருகில் உள்ள ஜெராக்ஸ் கடையில் ஜெராக்ஸ் எடுப்பதற்காக சென்ற போது மேற்படி அசல் கிரையப் பத்திரம் தவறி கீழே விழுந்து காணாமல் போய் விட்டது. மேற்படி அசல் கிரையப் பத்திரத்தை எமது கட்சிக்காரர் பல இடங்களில் தேடிப்பார்த்தும் கிடைக்கவில்லை.மேற்படி அசல் கிரையப் பத்திரம் கிடைக்கும்பட்சத்தில் என் வசமோ அல்லது எனது கட்சிக்காரர் வசமோ ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.**

**M.சுரேஷ், B.A.,B.L.,
அட்வகேட் & நோட்டரி பப்ளிக்
மார்க்கெட் ரோடு, வேடசந்தூர்-624710
செல் :96263-04777**

மாண்புமிகு முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்.
திருமங்கலம்.
I.A.No:579/2018 in
O.S.No:89/2015

செந்தில்குமார், த/பெ.ராமநாதன்
11,ராஜாஜி தெரு,
பி.பி.குளம், மதுரை-2.
------- மனுதாரர்/வாதி

--------எதிரிடை--------

1.நாயுடு சுப்பாராவ், த/பெ.ராமையா
48,ஜெனித் கருணா அபார்ட்மெண்ட்
பிளாட் எண்.F1,அகஸ்தியர் தெரு
கிழக்கு தாம்பரம், சென்னை-59.
2.அகிலாண்டேஸ்வரி ரியல் எஸ்டேட் பிரைவேட் லிமிடெட் கம்பெனி,
எஸ்.கே.ஜி மருத்துவமனை அருகில்
ஜவஹர் தெரு, திருமங்கலம் நகர்
மதுரை மாவட்டம்.
--------- எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

அறிவிப்பு

மேற்படி நம்பர் வழக்கை மனுதாரர்/வாதி, எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார்.மேற்படி வழக்கானது கடந்த 14.11.2018 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது.மேற்படி வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்க I.A.No.579/2018 என்ற மனு தாக்கல் செய்ததில் எதிர்மனுதாரர்களாகிய தாங்கள் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராக வரும் 06.10.2023-ம் தேதியன்று வாய்தா ஏற்பட்டுள்ளது.மேற்படி தேதியில் தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ சமூகம் நீதிமன்றத்தில் காலை 10.30மணிக்கு ஆஜராகி தங்கள் தரப்பு ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளவும்.தவறும் பட்சத்தில் சமூகம் நீதிமன்றத்தில் தக்க உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

G.அடைக்கலம், B.Sc.,B.L.,
அட்வகேட்/நோட்டரி
திருமங்கலம்.

மாண்புமிகு 3-வது கூடுதல் சார்பு நீதிமன்றம், மதுரை.
O.S.No.391/2020

கனரா வங்கி,
இராம்நாட் ரோடு கிளை, மதுரை,
அதன் கிளை மேலாளர் மூலமாக,
--- வாதி.

--- எதிர் ---

1.A.B.கௌதம்,
த/பெ.A.R.பாஸ்கரன்,
க.எண்.30, சென்சேவியர் தெரு,
பழைய கீழ் மதுரை ஸ்டேசன் ரோடு, மதுரை-625009.
2. A.R.பாஸ்கனர்,
த/பெ.ராஜகோபால ஐயர்,
மேற்படி முகவரி
--- பிரதிவாதிகள்

அறிவிப்பு

மேற்படி வாதி தாக்கல் செய்திருக்கும் இந்த வழக்கில் மேற்படி பிரதிவாதிகள் ஆகிய தாங்கள் ஆஜராக 30.10.2023-ம் தேதி வாய்தா ஏற்பட்டுள்ளது. இதில் தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபணை இருந்தால் மேற்படி வாய்தா தேதியன்று காலை 10.00 மணிக்கு சமூகம் நீதிமன்றத்தில் தாங்கள் நேரிலோ அல்லது தங்களது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக்கொள்ள வேண்டியது. தவறினால் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.

M.முத்துக்குமரன்,B.L.,
வழக்கறிஞர், மதுரை.

மாண்புமிகு 3-வது கூடுதல் சார்பு நீதிமன்றம், மதுரை.
O.S.No.1039/2021

கனரா வங்கி,
கீழ வெளி வீதி கிளை, மதுரை,
அதன் கிளை மேலாளர் மூலமாக,
--- வாதி.

--- எதிர் ---

1.R.வினோத்குமார்,
த/பெ.V.ராமர்,
க.எண்.34, தாயார் இல்லம்,
காந்திஜி தெரு, ஜெய்ஹிந்த்புரம்
2-வது தெரு, மதுரை-625011.
2.V.ராமர், த/பெ.வேலாயுதம்,
மேற்படி முகவரி.
--- பிரதிவாதிகள்

அறிவிப்பு

மேற்படி வாதி தாக்கல் செய்திருக்கும் இந்த வழக்கில் மேற்படி பிரதிவாதிகள் ஆகிய தாங்கள் ஆஜராக 12.10.2023-ம் தேதி வாய்தா ஏற்பட்டுள்ளது. இதில் தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபணை இருந்தால் மேற்படி வாய்தா தேதியன்று காலை 10.00 மணிக்கு சமூகம் நீதிமன்றத்தில் தாங்கள் நேரிலோ அல்லது தங்களது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறினால் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.

M.முத்துக்குமரன்,B.L.,
வழக்கறிஞர், மதுரை.

### ஒரே கையெழுத்தில் ரத்து செய்வோம் என்று கூறி விட்டு

# தற்போது நீட் தேர்வு விலக்குக்காக ஒரு கோடி கையெழுத்து கேட்கிறார் அமைச்சர் உதயநிதி

### முன்னாள் அமைச்சர் ஆர்.பி. உதயகுமார் பேட்டி

**மதுரை, செப். 22-**

ஒரே கையெழுத்தில் ரத்து செய்து செய்வோம் என்று கூறி விட்டு தற்போது நீட் தேர்வு விலக்குக்காக ஒரு கோடி கையெழுத்து கேட்கிறார் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் என்று முன்னாள் அமைச்சர் ஆர்.பி. உதயகுமார் கூறினார்.

இது குறித்து ஆர்.பி.உதயகுமார் கூறியதாவது;

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஒரே கையெழுத்தில் நீட் தேர்வை ரத்து செய்வோம். அந்த ரகசியம் எங்களுக்கு தெரியும் என்று கூறிய உதயநிதி ஸ்டாலின் தற்போது, நீட்டை ரத்து செய்ய ஒரு கோடி பேரிடம் கையெழுத்து பெறுவோம் என்று கூறுகிறார். இதன் மூலம் திமுக தோல்வி அடைந்து விட்டது. நீட் தேர்வு குறித்து ரகசியம் கேட்டால், எய்ம்ஸ் ரகசியத்தை வெளியிட தயாரா என்று கேள்வி எழுப்புகிறார். அதிகாரத்தில் நீங்கள் தான் உள்ளீர்கள், கேட்கும் இடத்தில் நாங்கள்உள்ளோம்.

நீங்கள் கேட்ட எய்ம்ஸ் ரகசியத்தை நான் கூறுகிறேன், நீங்கள் ஒருமுறை கூட எய்ம்ஸ் தேவை என்று குரல் கொடுக்கவில்லை, ஆனால் எய்ம்ஸ் மருத்துவமனையை தமிழகத்தில் கொண்டு வர வேண்டும் என்று அம்மா கோரிக்கை வைத்தார். அதன் அடிப்படையில் 2015-ம் ஆண்டு பிப்ரவரி 28ஆம் தேதி மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து 2018-ம் ஆண்டு எடப்பாடியார் ஆட்சியில் இதற்காக 224 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது இதற்காக 1,264 கோடி நிதி ஒதுக்கப்பட்டதாக மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து எய்ம்ஸ் கட்டும் இடத்தில் மண் பரிசோதனைகாக்க நாக்பூருக்கு செய்யப்பட்டு இது கட்டிடத்திற்கு ஏற்றது என்று அனுமதி பெறப்பட்டது. அதனை தொடர்ந்து மத்திய மருத்துவ கட்டுமான அதிகாரிகள் பார்வையிட்டு 2018 ஆம் ஆண்டு கட்டிட அனுமதியை வழங்கினர். அதனை தொடர்ந்து 2019 ஆம் ஆண்டு ஜனவரி 27ஆம் தேதி பாரதப் பிரதமரை அழைத்து வந்து எடப்பாடியார் எய்ம்ஸ் மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டினார்

மக்களிடம் கையெழுத்து வாங்குவது என்பது முற்றிலும் ஏமாற்று வேலை நாட்களகும்.மேலும் இது தற்கொலைக்கு வழியாக அமைக்கும் இது தடுப்புச் சுவராக அமையாது. மதுரைக்கு இந்த 28 மாதத்தில் நீங்கள் செய்த வளர்ச்சி திட்டங்களை பட்டியல் சொல்ல தயாரா? இவ்வாறு அவர் கூறினார்.

# நத்தத்தில் வீட்டுக்குள் புகுந்த சாரைப் பாம்பு



**நத்தம், செப், 22**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் தர்பார்நகரை சேர்ந்தவர் ராஜாமுகமது (40). இவரது வீட்டில் சாரைப்பாம்பு ஒன்று ஊர்ந்து சென்று கொண்டிருந்தது. இதை பார்த்த அவர் நத்தம் தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவித்தார்.

அதன்பேரில் சம்பவ இடத்திற்கு சென்ற நத்தம் தீயணைப்பு நிலைய அலுவலர் லெட்சுமணன் உள்ளிட்ட வீரர்கள் வீட்டில் ஊர்ந்து சென்று கொண்டிருந்த 4 அடி நீளமுள்ள சாரப்பாம்பை லாவகமாக கருவி மூலம் பிடித்தனர். பின்னர் அந்த பாம்பு நத்தம் வனத்துறையினரிடம் ஒப்படைக்கபட்டு வனப்பகுதிக்குள் விடப்பட்டது.

# பொட்டகவயல் அரசு மேல்நிலைப்பள்ளியில் மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள்

### முருகேசன் எம்.எல்.ஏ வழங்கினார்



**பரமக்குடி செப் 22**

பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட நயினார் கோவில் கிழக்கு ஒன்றியத்திலுள்ள பொட்டகவயல் அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன் வழங்கினார்.இந்நிகழ்ச்சிக்கு பொட்டகவயல் அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் ஆன்டோ கில்டா தலைமை தாங்கினார்.

நயினார் கோவில் கிழக்கு ஒன்றிய செயலாளர் அண்ணாமலை முன்னிலை வகித்தார்.பள்ளி ஆசிரியர் அனைவரையும் வரவேற்று பேசினார்.பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன் மாணவர்கள் மத்தியில் சிறப்புரையாற்றார்.அதன் பின்பு மாணவ மாணவிகளுக்கு அரசின் சார்பில் விலையில்லா மிதி வண்டிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் ஒன்றிய துணைச் செயலாளர் திலகர், பொட்டக வயல் ஊராட்சி மன்ற தலைவர் ஹக்கீம்,நயினார் கோவில் கிழக்கு ஒன்றிய அவைத் தலைவர் மீரா முகைதீன், மாவட்ட பிரதிநிதி நவாஸ்கான், மணக்குடி கந்தசாமி, துரை மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# உடல்நலம் பாதித்த முதியவரை தள்ளுவண்டியில் சிகிச்சைக்கு அழைத்துச் சென்றவருக்கு பாராட்டு

**விருதுநகர் செப்.22.**

விருதுநகர் யானை குழாய் தெருவை சேர்ந்தவர் சுரேஷ்குமார் 45, கொத்தனார் வேலை செய்து வருகிறார். இவருடன் முன்பு பணியாற்றிய ஆறுமுகம் என்பவர் ஆதரவின்றி உள்ளார். இந்நிலையில் ஆறுமுகத்திற்கு திடீரென்று உடல்நலம் பாதிக்கப்பட்டுள்ளது. அவரை விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்ல ஆம்பள சிறுக்கு தகவல் சொல்ல சுரேஷ் குமாரால் முடியவில்லை. இதனால் உடனடியாக அருகில் இருந்த தள்ளு வண்டியில் ஆறுமுகத்தை அமர வைத்து மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சைக்காக அரசு மருத்துவமனையில் சேர்த்தார். சுமார் 3 கிலோ மீட்டருக்கு உடன் பணியாற்றி நண்பரை காப்பாற்ற தள்ளுபடி அழைத்துச் சென்ற கூலித் தொழிலாளி சுரேஷ்குமாரை மருத்துவமனை ஊழியர்கள், டாக்டர்கள், உடன் பணியாற்றியவர்கள் வெகுவாக பாராட்டினர்.

# உயர்கல்வி மாணவர்களுக்கு சிறப்பு கல்விக்கடன் முகாம் ஆட்சித்தலைவர் ஜெயசீலன் தலைமையில் நடைபெற்றது

**விருதுநகர் செப்.22.**



விருதுநகர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி கலையரங்கத்தில் மாவட்ட நிர்வாகம், மாவட்ட முன்னோடி வங்கி மற்றும் அனைத்த வங்கிகளின் சார்பில் சிறப்பு கல்வி கடன் முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஜெயசீலன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் கூறியதாவது.

உயர் கல்வி மாணவர்கள் பெறுவதர்காக மத்திய, மாநில அரசுகள் பல்வேறு வசதிகள் மற்றும் வாய்ப்புகளை ஏற்படுத்தி தந்திருக்கின்றது.

அதிலும் குறிப்பாக தொழிற்கல்வி, பொறியியல், மருத்துவம், கால்நடை மருத்துவம்,வேளாண்மை அறிவியல், சட்டம் போன்ற பல்வேறு மேற்படிப்புகளில், குறிப்பாக முதல் தலைமுறை பட்டதாரிகள் உயர் கல்வி வாய்ப்புகளுக்கு சென்று கல்வியின் மூலம் சமூக பொருளாதார உயர்வினை அடைவதற்காக பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

பொருளாதார காரணங்களால் மாணவர்களுடைய உயர்கல்வி படிப்பில் எந்த சிக்கலும் வந்து விடக்கூடாது என்பதற்காக கல்வி உதவித் தொகை, கல்லூரி கட்டணம், விடுதி கட்டணம் உள்ளிட்டவைகளை ஈடு செய்வதற்காக பல்வேறு பொதுத்துறை வங்கிகள் மற்றும் மாநில அரசின் முன்னெடுப்பின் காரணமாக இந்த நிகழ்ச்சி ஒருங்கிணைக்கப்பட்டு மாணவர்களுக்கு எந்த விதமான சிரமமின்றி வழிகாட்டுதல் மற்றும் கடன்களை பெறுவதில் உள்ள நடைமுறை சிக்கல்களை கலைந்து அவர்களுக்கு விரைவாகவும், அவர்களுடைய தகவல்களைப் பெற்று www.vidyalakshmi.com என்ற இணையதளத்தில் மாணவர்களுடைய விபரங்களை பதிவு செய்து, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர், அனைத்து வங்கி மேலாளர்கள், துணை மேலாளர்கள் ஆகியோரின் முழுமையான ஒத்துழைப்போடு ஒரே இடத்தில் கல்வி கடன் வழங்குவதற்காக இந்த கல்விக் கடன் முகாம் தற்போது நடைபெற்று வருகிறது.

கல்விக்கடன் என்பது எதிர்காலத்திற்கான முதலீடு. மாணவர்கள் கல்வி கடன் பெற்று உயர் கல்வி பயின்று நல்ல ஒரு நிலைமைக்கு செல்லும்போது அவர்களால் தனிநபர் மற்றும் நாட்டின் பொருளாதார முன்னேற்றமும் அடைகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் வீ.ப.ஜெயசீலன், தெரிவித்தார்.

இந்த கல்வி கடன் முகாமில் ரூ.4.88 கோடி கல்வி கடன் பெறுவதற்காக 114 மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு, இதில் 91 மாணவர்களுக்கு ரூ.4.11 கோடிக்கான கல்வி கடன் பெறுவதற்கான ஆணைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஜெயசீலன். வழங்கினார்.

# தூய்மை இந்தியா திட்ட உறுதிமொழி

**கமுதி செப் : 22**

கமுதி அருகே பசும்பொன் உ. முத்துராமலிங்கத் தேவர் நினைவுக் கல்லூரியில் நாட்டு நலப்பணி திட்டத்தின் சார்பாக சமூக நீதி நாள் மற்றும் தூய்மை இந்தியா திட்டம் சார்பில் பாரத தேசத்தின் தூய்மைக்கு ஒவ்வொரு மனிதரும் வருடத்திற்கு 100 மணி நேரம் தன்னை முழுமையாக அர்ப்பணிக்க வேண்டும் என உறுதிமொழி எடுக்கப்பட்டது.முதல்வர் முனைவர் கோ.தர்மர் தலைமை வகித்தார், வணிகவியல்த் துறை மாணவி காளிகாதேவி, ஆங்கிலத்துறை மாணவி மகாதேவி ஆகியோர் உறுதிமொழியை வாசித்தார்கள். நாட்டு நலப்பணித் திட்டத்தின் மாணவ மாணவியர்கள், பேராசிரியர்கள் மற்றும் அலுவலக பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு உறுதிமொழி ஏற்றார்கள் நாட்டு நலப்பணித் திட்டம் அலுவலர் முனைவர். ச. விக்டோரியாஆலன் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார்கள்.

# அம்மையநாயக்கனூர் பேரூராட்சியில் நடந்த டெங்கு ஒழிப்பு சிறப்பு முகாம்



**வத்தலகுண்டு செப்.22**

திண்டுக்கல் மாவட்டம் அம்மையநாயக்கனூர் பேரூராட்சி பகுதியில் திண்டுக்கல் மாவட்ட கலெக்டர் பூங்கொடி திண்டுக்கல் மண்டலம் பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் மனோரஞ்சிதம் ஆகியோர் உத்தரவின் பெயரில். பேரூராட்சி தலைவர் செல்வராஜ், துணைத் தலைவர் விமல் குமார். பேரூராட்சி செயல் அலுவலர் பூங்கொடி முருகு. சுகாதார ஆய்வாளர் செந்தில்குமார் ஆகியோர் தலைமையில் அம்மையநாயக்கனூர் பேரூராட்சி பகுதியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் டெங்கு கொசு ஒழிப்பு புகை மருந்துகள் அடிக்கப்பட்டு வருகிறது கழிவு நீர் வாய்க்கால் அனைத்தும் சுத்தம் செய்யப்பட்டு மருந்துகள் அடிக்கப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களிலும் பள்ளி வளாகங்கள் உள்பட்டுள்ள பகுதிகளில் கொசு ஒழிப்பு புகை மருந்துகள் அடிக்கப் பட்டு வருகிறது. மேலும் பொதுமக்கள் பயந்தப்படுத் தப்படும் குப்பை கழிவுகளை பொது இடங்களில் கொட்டக்கூடாது பேரூராட்சி பணியாளர்கள் வரும் போது மக்கும் குப்பை மக்காத குப்பை என தரம் பிரித்து கொடுக்க வேண்டும், தங்களுடைய சுற்றுப்புற பகுதிகளை சுகாதார முறையில். தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். தங்கள் பகுதிகளில் யாருக்கேனும் காய்ச்சல் வந்தால் உடனடியாக பேரூராட்சி அலுவலகத்திற்கு தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்க வேண்டும் என்று பேரூராட்சி சார்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டு உள்ளது.

இந்நிகழ்ச்சியில் பேரூராட்சி தலைமை எழுத்தர் அசோகன், மற்றும் அனைத்து பணியாளர்கள், பேரூராட்சி கவுன்சிலர்கள் கருணாகரன் நசீர் முகமது கவிதா விஜயகுமார் முத்துலட்சுமி தேவி குணசீலி ஆரோக்கிய மேரி செல்வி மாரியப்பன்.

பேரூராட்சி தூய்மை காவலர்கள், கொசு ஒழிப்பு பணியாளர்கள் ஆகியோருடன் முழு சுகாதார பணிகள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது என்று பேரூராட்சி செயல் அலுவலர் கூறினார்.

# மக்கள் மற்றும் வணிகங்களுக்கு வாட்ஸ்ஆப் மூலம் புதிய அனுபவங்களை உருவாக்குதல்

**சென்னை, செப் 22-**

நாங்கள் ஃப்ளோக்களை அறிமுகப்படுத்துகிறோம். இதன் மூலம் வணிகங்கள், உங்கள் ரயில் இருக்கையை விரைவாகத் தேர்ந்தெடுப்பது, உணவை ஆர்டர் செய்வது அல்லது சந்திப்பை முன்பதிவு செய்வது போன்ற கூடுதல் அனுபவங்களை வழங்க முடியும் - இவை அனைத்தையும் நீங்கள் உங்கள் சாட்டில் இருந்து வெளியேறாமல். ஃப்ளோக்கள் மூலம் மேற்கொள்ளலாம். வணிகங்கள், இதன் மூலம் பல்வேறு தேவைகளை ஆதரிக்கும் அதிக எண்ணிக்கையிலான மெனுக்கள் மற்றும் தனிப்பயனாக்கக்கூடிய படிவங்களை வழங்க முடியும். வரும் வாரங்களில் வாட்ஸ்அப் பிசினஸ் பிளாட்ஃபார்மைப் பயன்படுத்தி உலகெங்கிலும் உள்ள வணிகங்களுக்கு ஃப்ளோக்கள் கிடைக்கும் படிச் செய்யவிருக்கிறோம்.

சாட் மூலமாக நேரடியாக வாங்குவதற்கான செயல்பாட்டை மிகவும் எளிதாக்குகிறோம். இன்று முதல், இந்தியாவில் உள்ளவர்கள் தங்கள் கார்ட்டில் பொருட்களைச் சேர்க்கலாம் மற்றும் ஆதரிக்கப்படும் அனைத்து யூபிஐ ஆப்ஸ், டெபிட் மற்றும் கிரெடிட் கார்டுகள் மற்றும் பலவற்றிலிருந்து தங்களுக்கு விருப்பமான முறையைப் பயன்படுத்தி பணம் அனுப்பலாம். இது குறித்து மெட்டாவின் நிறுவனர் மற்றும் சி.இ.ஓ. மார்க் ஜுக்கர்பெர்க் கூறுகையில், எங்கள் மெஸேஜிங் ஃபார்மெட்டுகள், எங்கள் குரூப் சாட்ஸ் மற்றும் பிராட்காஸ்டிங் சேனல்கள் மூலம் நாங்கள் தொடர்ந்து பல புதுமைகளை உருவாக்கி வருகிறோம். அதே போன்ற கவனத்தை நாங்கள் வணிகங்களை ஆதரிப்பதிலும் செலுத்தி, பயன்படுத்துவதற்கு எளிமையான மற்றும் அளவிட எளிதான கருவிகளை உருவாக்குவதன் மூலம், அவர்கள் தங்கள் வாடிக்கையாளர்களுடன் மிகச் சிறந்த வழிகளில் இணைக்க முடியும் என்பதைக் கருத்தில் கொண்டு செயல்பட்டு வருகிறோம் என்று கூறினார்.

### வழக்கு விசாரணைக்கு ஆஜராகாமல்

# தலைமறைவாக உள்ளவர் அருப்புக்கோட்டை குற்றவியல் நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவு

**அருப்புக்கோட்டை செப்.22.**

மதுரை திருமங்கலம் தாலுகா சுந்தரங் குண்டு கிராமத்தில் குடியிருந்து வரும் ராஜூ மகன் கண்ணன் என்பவர் மீது அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலையத்தில் குற்ற எண் 161/ 2012 ,நீதி மன்ற .சி. சி 183/2013 வழக்கில் கண்ணன் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு இந்த வழக்கு அருப்புக்கோட்டை குற்றவியல் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. தொடர்ந்து கண்ணன் வழக்கு விசாரணைக்கு ஆஜராகாமல் இருந்து வருவதாகவும், அதனை தொடர்ந்து அவரை கைது செய்து அருப்புக்கோட்டை குற்றவியல் நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய அருப்புக்கோட்டை தாலுகா காவல் காவலர்களுக்கு கைது வாரண்டு பிறப்பிக்கப்பட்டது. கண்ணன் தொடர்ந்து தலைமறைவாக இருப்பதாகவும் அவரை கண்டுபிடிக்க முடியவில்லை என்று காவல் துறையினர் கூறியதால் குற்றவியல் நீதிமன்ற கைது வாரண்டு திரும்பப் பெறப்பட்டது. எனவே மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட கண்ணன் 20-10- 2023ஆம் தேதி அன்று அருப்புக்கோட்டை குற்றவியல் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என அருப்புக்கோட்டை குற்றவியல் நீதிமன்ற நீதிபதி முத்து இசக்கி உத்தரவிட்டுள்ளார்.

# சென்னையில் செப். 30-ம் தேதி முதல் அக். 2 வரை சர்வதேச கோமாளி விழா

**சென்னை, செப். 22-**

சர்வதேச கோமாளி திருவிழா வந்துவிட்டது! விருது பெற்ற தொழில்முறை கோமாளிகள், ஊடாடும் நிகழ்ச்சிகள், பட்டறைகள் மற்றும் அனைத்து வயதினருக்கான பல பொழுதுபோக்கு செயல்பாடுகளின் திறமையான வரிசையின் மூலம் சிரிக்கவும் முழுமையாக மகிழ்வும் தயாராகுங்கள். 100 நிமிட இடைவிடாத சிரிப்பு, நகைச்சுவை, வித்தை மற்றும் இசையுடன் கூடிய தியேட்டர் ஷோ, சர்வதேச கோமாளி திருவிழா செப்டம்பர் 30 முதல் அக்டோபர் 2 வரை சர் முத்தா வெங்கடசுப்பா ராவ் கச்சேரி அரங்கம் (லேடி ஆண்டாள் பள்ளி வளாகத்திற்குள்), சென்னை, உடன் தினமும் மாலை 3 மற்றும் இரவு 7 மணிக்கு காட்சிகள்.விருது வென்ற மார்ட்டின் ஃப்ளப்பர் டிசோசா இந்த திரைப்படத்தை தயாரித்துள்ளார்.

சர்வதேச கோமாளி, உலக க்ளவ்ன் சங்கத்தின் முன்னாள் துணைத் தலைவர், மற்றும் த சர்வதேச ஆண்டின் சிறந்த தொகுப்பாளர் விருது பெற்றவர். ஃப்ளூப்பர் உலகின் மிகப் பெரிய மேடைகளில் 7 நாடுகளில் நிகழ்ச்சிகளை நிகழ்த்தியுள்ளார். இப்போது அவர் சர்வதேச பொழுதுபோக்கு குறித்த தனது வளமான அனுபவத்தை உங்கள் நகரத்திற்கு கொண்டு வருகிறார். ‘‘கோமாளி என்பது ஒப்பனை மற்றும் ஆடைகள் மட்டும் அல்ல அதை விட அதிகம்; தொழில்முறை கோமாளிகள் பலர் இதற்காக ஒத்திகை செய்ய திறமையும் பயிற்சியும் தேவை திருவிழா இப்போது பல ஆண்டுகளாக மெருகேற்றப்பட்டுள்ளது.எங்கள் கோமாளி கதாபாத்திரங்கள் உங்களுடைய வாழ்க்கையில் எவ்வளவு மகிழ்ச்சியை கொண்டு வர முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். மார்ட்டின் ஃப்ளப்பர் டி’சோசாவைப் பகிர்ந்து கொள்கிறார், அவருடைய கோமாளி கதாபாத்திரம் ஃப்ளப்பர் என்று பிரபலமாக அறியப்படுகிறது.

# ராமேஸ்வரம் மீனவர்கள் இலங்கை கடற்படையால் விரட்டியடிப்பு

**ராமேஸ்வரம், செப்,22**

கச்சத்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த ராமேஸ்வரம் மீனவர்களை இலங்கை கடற்படையினர் அப்பகுதியில் இருந்து மீன்பிடிக்க விடாமல் விரட்டி அடித்ததால் மீன் பிடி தொழிலில் பெரும் நஷ்டம் ஏற்பட்டதாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் நேற்று தெரிவித்தனர்.

ராமேஸ்வரம் கடலோரப் பகுதியில் இருந்து நேற்று முன்திநம் காலையில் 300-க்கும் மேற்பட்ட விசைப் படகுகளில் மீன்பிடி அனுமதிச் சிட்டு பெற்றுக் கொண்டு மீன்பிடி உபகரணங்களை சேகரித்துக் கொண்டு 1500க்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன் பிடிக்க கடலுக்குச் சென்றனர். மீனவர்கள் இந்திய கடலோரப் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்துள்ளனர்.

அவ்வழியாக இலங்கை கடற்படையினர் ரோந்து பணியில் ஈடுபட்டு வந்துள்ளனர் அப்போது அங்கு மீன் பிடித்துக் கொண்டிருந்த ராமேஸ்வரம் மீனவர்களை பார்த்து இங்கு மீன் பிடிக்க வரக்கூடாது என மீனவர்களை எச்சரித்து விரட்டி யுள்ளனர்.உயிருக்கு பயந்த மீனவர்கள் அப்பகுதியில் இருந்து படகுகளை செலுத்திக்கொண்டு நேற்று காலையில் ராமேஸ்வரம் துறைமுகம் கடல் பகுதிக்கு வந்து சேர்ந்தனர்.

இலங்கை கடற்படை ரோந்து பணியில் இரவு முழுவதும் ஈடுபட்டு கொண்டு மீன்பிடிக்க விடாமல் விரட்டி அடித்ததால் தல ஒவ்வொரு படகிற்கும் ரூ.5 ஆயிரம். முதல் ரூ. 10 ஆயிரம் வரை நூற்றுக்கு மேற்பட்ட படகுகளுக்கு நஷ்டம் ஏற்பட்டதாக பாதிக்கப்பட்ட மீனவர் தெரிவித்தனர்.



**ஒட்டன்சத்திரம் பேருந்து நிலையம் எதிரே உள்ள காந்தி காய்கறி மார்க்கெட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள வணிக வளாக கடைகளை உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கள் துறை அமைச்சர் அர. சக்கரபாணி ஆலோசனையின் பேரில் நகர்மன்றத் தலைவர் திருமலைசாமி நேரில் ஆய்வு செய்தார். ஆய்வின்போது பணி ஆய்வாளர் ஆசிக் உள்ளிட்ட நகராட்சி அதிகாரிகள் உடன் இருந்தனர்.**



**தேனி மாவட்டம் சுருளியாறு அணைக்கட்டு புனரமைக்கும் பணிகள் முழுமையாக நிறைவுற்று அதன் மூலம் பாசனம் நடைபெற்று வருவதை கலெக்டர் ஷஜீவனா தலைமையில் உலக வங்கி குழு உறுப்பினரும், மூத்த வேளாண் வணிக நிபுணர் பர்போட் யூசேபி, ஆலோசகர் ஹம்மத் பட்டேல் ஆகியோர் நேற்று கள ஆய்வு மேற்கொண்டனர்.**

